**செய்தி வெளியீடு எண்: 449 /2018** **நாள். 28.09.2018**

**சேலம் மாவட்டத்தில் உள்ள பள்ளி சத்துணவுமையங்களில் காலியாக உள்ள அமைப்பாளர், சமையல் உதவியாளர் உள்ளிட்ட 1101 காலிப்பணியிடங்களுக்கு தகுதியுடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

**ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்களில் 01.10.2018 முதல் அலுவலக வேலை நாட்களில் / நேரங்களில் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளலாம்.**

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 16.10.2018 அன்று மாலை 4.00 மணிக்குள் விண்ணப்பம் பெற்ற அலுவலகத்திலேயே சமர்ப்பித்தல் வேண்டும்.**

**சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோகிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப அவர்கள் அறிவிப்பு**

_______******_____

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள காலிப்பணியிடங்களை இன சுழற்சி முறையில் நிரப்ப அரசால் உத்திரவிடப்பட்டுள்ளது. அரசு நிதி உதவி பெறும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு இன சுழற்சி முறை பின்பற்றபட மாட்டாது.

இப்பணியிடங்களுக்கு கீழ்காணும் தகுதி பெற்ற பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஆண் மனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

| பணி நிரப்பப்படும் விபரம் | To. No of Vacancy | GT | MBC | BC | BC (Muslim) | SC | SC (A) | ST | Minority | Total | Widow | PHP |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைப்பாளர் | 316 | 91 | 60 | 78 | 10 | 44 | 9 | 3 | 21 | 316 | 64 | 12 |
| சமையல் உதவியாளர் | 785 | 233 | 150 | 199 | 27 | 112 | 23 | 8 | 33 | 785 | 164 | 0 |
| மொத்தம் | **1101** | **324** | **210** | **277** | **37** | **156** | **32** | **11** | **54** | **1101** | **228** | **12** |

சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள்/நகராட்சி/மாநகராட்சி அலுவலகங்களில் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் 01.10.2018 முதல் 15.10.2018 வரை அலுவலக வேலை நேரங்களில் வழங்கப்படும். அலுவலகத்தால் வரையறுக்கப்பட்ட படிவம் அடங்கிய விண்ணப்பம் மட்டுமே ஏற்றுக்கொள்ள தக்கதாகும். பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் கோரியுள்ள சான்றிதழ்களின் நகல்களை

இணைத்து 16.10.2018 அன்று பிற்பகல் 4.00 மணிக்குள் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் / நகராட்சி / மாநகராட்சி அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட வேண்டும். விடுமுறை நாட்களில் விண்ணப்பங்கள் வழங்கவோ, பெறப்படவோ மாட்டாது. குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் அளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவோ, பெற்றுக்கொள்ளப்படவோ மாட்டாது. ஒரு விண்ணப்பதாரர் ஒரு காலிப்பணியிடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

மேற்காணும் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்போர் கீழ்க்காணும் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

- ❖ அமைப்பாளர் பதவிக்கு பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். இவர்கள் 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருந்தால் 8ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தோல்வி அடைந்தவராக இருக்க வேண்டும். இவர்களில் 18 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ மேலும் விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் மேற்படி கல்வித் தகுதி இருப்பின் 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ மாற்றுத் திறனாளியாக இருப்பின் உச்ச வயதில் 3 ஆண்டுகள் தளர்வு.
- ❖ சமையல் உதவியாளர் காலிபணியிடங்களுக்கு பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோராக இருப்பின் 5ம் வகுப்பு தேர்ச்சி/ தேர்ச்சி பெறாதவர் விண்ணப்பிக்கலாம். இவர்கள் 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருந்தால் எழுது படிக்க தெரிந்தவர்களாக இருந்தால் போதுமானது. இவர்களில் 18 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ மேலும் விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் மேற்படி கல்வித் தகுதி இருப்பின் 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ மூன்றாம் பாலினத்தை சேர்ந்த பெண்தன்மைக்கு உரிய சான்று பெற்றவர்கள் இப்பணியிடங்களுக்கு உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட இரண்டு பணிகளுக்கும் விண்ணப்பிப்போர் நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

சத்துணவு சமையல் உதவியாளர் பணிக்கு விண்ணப்பிப்போர் சத்துணவு மைய கணக்குகளை தனியே பராமரிக்கும் தகுதி பெற்றிருக்க வேண்டும்

## ஊதிய விகிதம்

அமைப்பாளர் பணிக்கு ரூ.7700–24200 ஊதியவிகிதம் மற்றும் பிற படிகள் வழங்கப்படும்

சமையல் உதவியாளர் பணிக்கு ரூ.3000–9000 ஊதியவிகிதம் மற்றும் பிற படிகள் வழங்கப்படும்

சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் நிலைகளில் இனசுழற்சி (Rule of Reservation) முறையில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும். அரசு நிதி உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப இனசுழற்சி முறை பின்பற்றப்பட மாட்டாது. காலிப்பணியிடங்கள் மற்றும் அவற்றின் இனசுழற்சி குறித்த விபரங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் /நகராட்சி/ மாநகராட்சி அலுவலகத்தில் தகவல் பலகையில் அறிவிக்கப்படும். மேலும் காலிப்பணியிடங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதியில் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தப்படும். அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதியின்படியே பணியிடங்கள் நிரப்பப்படும். மாற்றுத்திறனாளியாக இருப்பின் சமையல் பணியை மேற்கொள்ளும் உடல் தகுதியோடு இருத்தல் அவசியம்.

குறித்த காலத்திற்குள் பெறப்பட்ட விண்ணப்பங்களை உரிய பரிசீலனைக்கு பின் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்முக தேர்வுக்கான அழைப்பாணை அனுப்பப்படும். அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள தேதியில் / இடத்தில் நேர்முக தேர்விற்கு விண்ணப்பதாரர் பள்ளிக்கல்வி இறுதி சான்று, மதிப்பெண் பட்டியல், சாதிச்சான்று மற்றும் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட தூரச்சான்று ஆகிய அசல் சான்றுகளுடன் நேரில் ஆஜராக வேண்டியது. இருப்பிட சான்றுக்கான ஆதாரமாக ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ரேசன் கார்டு ஆகியவற்றில் ஏதேனும் இரு சான்றுகளின் அசல் கட்டாயம் சமர்பிக்கப்பட வேண்டும். ஆதரவற்ற விதவை / விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் அதற்கான அசல் சான்றுடன் ஆஜராக வேண்டும்.

ரோகிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப
மாவட்ட ஆட்சியர் சேலம்

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சேலம் மாவட்டம்.